
SINCE 2013
We Shine Academy®
guiding you to get through
TNPSC | TNUSRB | RRB | SSC | BANK EXAM
தமிழ் இலக்கணம்
புணர்ச்சி விதிகள்
பட்டுக்கோட்டை
நான்மணிக்கடிகை
பிரித்து எழுதுக
CLASS 21
DAILY LIVE - 10PM
ANANDHAVELAN
FACULTY OF WESHINE
தமிழ் கற்போம் ! தமிழால் வெல்வோம் !
தமிழால் உயர்வோம் | தமிழால் வெல்வோம் | இலக்கு ஒன்றே வெற்றி நிச்சயம்

# புணர்ச்சி விதிகள்,
# பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்,
# நான்மணிக்கடிகை

# புணர்ச்சி

1. நிலைமொழி மற்றும் வருமொழிக்கு இடையே நிகழ்வது தான் புணர்ச்சி ஆகும்

2. புணர்மொழியின் இயல்பு

எழுத்து வகையால் சொற்கள் நான்கு வகைப்படும்.

| | |
|---|---|
| கலை + அழகு | உயிரீறு |
| மண் + குடம் | மெய்யீறு |
| வாழை + இலை | உயிர்முதல் |
| வாழை + மரம் | மெய்ம்முதல் |

மேலும் இப்புணர்ச்சியை நிலைமொழி இறுதி எழுத்து, வருமொழி முதல் எழுத்து அடிப்படையில் நான்காகப் பிரிக்கலாம்.

| | |
|---|---|
| உயிர்முன் உயிர் | மணி (ண் + இ) + அடி = மணியடி |
| உயிர்முன் மெய் | பனி + காற்று = பனிக்காற்று |
| மெய்ம்முன் உயிர் | ஆல் + இலை = ஆலிலை |
| மெய்ம்முன் மெய் | மரம் + (க் + இ) = மரக்கிளை |

## 3. இயல்பு புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்

- புணர்ச்சியில் நிலைமொழியும் வருமொழியும் அடையும் மாற்றங்களின் அடிப்படையில் புணர்ச்சியை இருவகைப்படுத்தலாம்.
- புணர்ச்சியின்போது மாற்றங்கள் எதுவுமின்றி இயல்பாகப் புணர்வது இயல்பு புணர்ச்சி எனப்படும்.

வாழை + மரம் = வாழைமரம்

செடி + கொடி = செடிகொடி

மண் + மலை = மண்மலை

- புணர்ச்சியின்போது ஏதேனும் மாற்றம் நிகழ்ந்தால் அது விகாரப் புணர்ச்சி எனப்படும்.
- இந்த மாற்றம் மூன்று வகைப்படும்.
- அவை: தோன்றல், திரிதல், கெடுதல்

(எ.கா.) i) நுழைவு + தேர்வு = நுழைவுத்தேர்வு (தோன்றல்)

ii) கல்லூரி + சாலை = கல்லூரிச்சாலை (தோன்றல்)

iii) பல் + பசை = பற்பசை (திரிதல்)

iv) புறம் + நானூறு = புறநானூறு (கெடுதல்)

## 1) உயிரீற்றுப் புணர்ச்சி

a) நிலைமொழி ஈற்றில் → இ, ஈ, ஐ

வருமொழி முதல் → உயிரெழுத்து (12)

**Result → யகரம் தோன்றும்**

(எ.கா.) மணி + அழகு → மணியழகு

தீ + எரி → தீயெரி

ஓடை + ஓரம் → ஓடையோரம்

b) நிலைமொழி ஈற்று → இ, ஈ, ஐ தவிர பிற உயிரெழுத்துகள்

வருமொழி முதல் → உயிரெழுத்துகள் (12)

Result → வகரம் தோன்றும்

(எ.கா.) பல + உயிர் → பலவுயிர்

பா + இனம் → பாவினம்

c) நிலைமொழி ஈற்று → ஏகாரம்

வருமொழி முதல் → உயிரெழுத்துக்கள் (12)

**Result → யகரம், வகரமோ தோன்றும்**

(எ.கா.) சே + அடி = சே + ய் + அடி = சேயடி;

சே + வ் + அடி = சேவடி

தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம்

## 2) குற்றியலுகரப் புணர்ச்சி

a) நிலைமொழி ஈற்றில் → குற்றியலுகரம்

வருமொழி முதல் → உயிரெழுத்து

**Result**

↓

உகரம் கெட்டு, நிலைமொழி ஈற்றுமெய்

வரும்மொழி உயிருடன் புணரும்

(எ.கா.) 1) வட்டு + ஆடினான்

i) வட் (ட் + உ) + ஆடினான்

ii) ‘உ’ கெடும்

iii) வட் (ட் + ஆ) டினான்

iv) வட்டாடினான்

2) உறவு + அழகு → உறவழகு

3) மாசு + அற்றார் → மாசற்றார்

b) நிலைமொழி ஈற்றில் → நெடில்தொடர், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

வருமொழி → உயிர்மெய்

**Result**

↓

குற்றியலுகரத்தின் மெய் புதியதாக தோன்றும்

(எ.கா.) வீடு + தோட்டம் → வீட்டுத்தோட்டம்

காடு + மரம் → காட்டுமரம்

முரடு + காளை → முரட்டுக்காளை

சோறு + பானை → சோற்றுப்பானை

ஆறு + நீர் → ஆற்று நீர்

## 3) முற்றியலுகரப் புணர்ச்சி

நிலைமொழி ஈற்றில் → முற்றியலுகரம்

வருமொழி முதல் → உயிரெழுத்து (12)

**Result**

↓

உகரம் கெட்டு முற்றியலுகர மெய்

உயிருடன் இணையும்

(எ.கா.) வரவு + அறிந்தான் → வரவறிந்தான்

((வ் +உ) + அ → உ கெடும்)

## 4) பூப்பெயர்ப் புணர்ச்சி

நிலைமொழி ஈற்றில் → பூ

வருமொழி முதல் → வல்லின மெய்யெழுத்து

**Result**

↓

வல்லினம் மிகும்

+

வல்லின இன எழுத்துடனும் மிகும்

(எ.கா.) பூ + கொடி → பூக்கொடி, பூங்கொடி

பூ + சோலை → பூச்சோலை, பூஞ்சோலை

பூ + பந்து → பூப்பந்து, பூம்பந்து

## 5) தனிக்குறில் முன் ஒற்று புணர்ச்சி

நிலைமொழி ஈற்றில் → ஒற்றெழுத்து (தனிக்குறில்)

வருமொழி முதல் → உயிரெழுத்து (12)

**Result**

↓

ஒற்று இரட்டித்து புணரும்

(எ.கா.) : கல் + அதர் → கல்லதர்

(கல் (ல் + அ) தர்)

நிலைமொழிச் சொல்லின் இறுதி எழுத்தாக மகரமெய் வரும்போது, அச்சொல் மூன்று நிலைகளில் புணரும்

- மகரமெய் கெட்டுப் புணரும்
- மகரமெய் கெட்டு இன மெல்லெழுத்துத் தோன்றிப் புணரும்.
- மகரமெய் கெட்டு வல்லினம் மிக்குப் புணரும்.
- பாடம் + வேளை – பாடவேளை

  - மகரமெய் கெட்டுப் புணர்ந்தது

- மகரமெய் கெட்டுப் புணர்ந்தது

- பழம் + தோல் – பழ + தோல் – பழத்தோல்

- மகரமெய் கெட்டு வல்லினம் மிக்குப் புணர்ந்தது.

காலம் + கடந்தவன் – காலங்கடந்தவன்

- வருமொழி முதலெழுத்துக்கேற்ப மகரமெய் திரிந்து

புணர்ந்தது.

## 7) பண்புப்பெயர்ப் புணர்ச்சி

i) பெருமை + வழி → பெருவழி

(ஈறு போதல் விதிப்படி 'மை' கெட்டு புணரும்)

ii) பெருமை + அன் → பெரியன்

(ஈறுபோதல் விதிப்படி 'மை' கெட்டு உகரம் → இகரமாய் திரியும்)

iii) முதுமை + ஊர் → மூதூர்

(ஈறுபோதல் விதிப்படி மை கெட்டு நிலைமொழி முதல் எழுத்து நெடிலாக மாறும்)

iv) பசுமை + தமிழ் → பைந்தமிழ்

(ஈறுபொதல் விதிப்படி மை கெட்டு நிலைமொழி முதல் எழுத்து ஐகாரமாக மாறும்)

# 8) பல சில

## a) இயல்பாகப் புணரும்

பல + பல = பலபல

சில + சில = சிலசில

## b) வல்லெழுத்து மிக்குப் புணரும்

பல + பல = பலப்பல

சில + சில = சிலச்சில

## 9) தகரம், றகரமாகுதல்

(எ.கா.) பொன் + தீது = பொன்றீது

கல் + தீது = கற்றீது

## 10) நகரம், னகரமாதல்

(எ.கா.) பொன் + நன்று = பொன்னன்று

கல் + நன்று = கன்னன்று

1. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனாரின் பட்டப்பெயர்

(A) புரட்சிக் கவிஞர்

(B) உவமைக் கவிஞர்

(C) மக்கள் கவிஞர்

(D) இயற்கைக் கவிஞர்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

2. தேர்ந்தெடுத்து எழுதுக.
'மக்கள் கவிஞர்' என்றழைக்கப்படுபவர் ——————.
'பகுத்தறிவுக் கவிராயர்' என்றழைக்கப்படுபவர் —————— முறையே.
(A) வாணிதாசன் – பெருஞ்சித்திரனார்
(B) பாரதியார் – கண்ணதாசன்
(C) ந. பிச்சமூர்த்தி – மு. மேத்தா
(D) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் – உடுமலை நாராயண கவி

3. 'மக்கள் கவிஞர்' என அழைக்கப்படுபவர் யார்?
(A) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
(B) அழ. வள்ளியப்பா
(C) பாரதிதாசன்
(D) பாரதியார்

We Shine Academy SINCE 2013 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

4. பொருத்துக:

| | | |
|---|---|---|
| (a) காந்தியக் கவிஞர் | — | 1. சுரதா |
| (b) உவமைக் கவிஞர் | — | 2. நாமக்கல் கவிஞர் |
| (c) மக்கள் கவிஞர் | — | 3. வாணிதாசன் |
| (d) கவிஞரேறு | — | 4. பட்டுக்கோட்டை |

(A) 2 1 4 3 (B) 4 3 2 1 (C) 3 4 1 2 (D) 1 2 3 4

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

5. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனாரின் பட்டப்பெயர்

(A) புரட்சிக் கவிஞர்
(B) உவமைக் கவிஞர்
(C) மக்கள் கவிஞர்
(D) இயற்கைக் கவிஞர்

We Shine Academy SINCE 2013 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

6. "உச்சி மலையிலே ஊறும் அருவிகள்
ஒரே வழியில் கலக்குது
ஒற்றுமையில்லா மனிதகுலம்
உயர்வு தாழ்வு வளர்க்குது" – என்று பாடியவர்

(A) கண்ணதாசன்

(B) அ. மருதகாசி

(C) உடுமலை நாராயண கவி

(D) பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரம்

7. பொருத்துக:

| நூல் | | ஆசிரியர் பெயர் |
| --- | --- | --- |
| (a) திரிகடுகம் | – | 1. விளம்பிநாகனார் |
| (b) சிறுபஞ்சமூலம் | – | 2. கணிமேதாவியார் |
| (c) ஏலாதி | – | 3. நல்லாதனார் |
| (d) நான்மணிக்கடிகை | – | 4. காரியாசான் |

(A) 1 4 2 3 (B) 3 2 1 4 (C) 3 4 2 1 (D) 4 1 3 2

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

8. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எங்கு பிறந்தார்?

(A) சிறுகூடல்பட்டி

(B) செங்கப்படுத்தான்காடு

(C) எட்டையபுரம்

(D) புதுச்சேரி

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

9. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் சிறப்புப் பெயர் என்ன?

(A) புரட்சிக்கவிஞர்
(B) மக்கள் கவிஞர்
(C) உவமைக் கவிஞர்
(D) கவிஞாயிறு

10. "செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத் திறமைதான் நமது செல்வம்" என்று பாடியவர் யார்?

(A) பாரதிதாசன்

(B) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

(C) கண்ணதாசன்

(D) மருதகாசி

We Shine Academy SINCE 2013 TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM Guiding you to get through

11. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் யாரிடம் கவிதை எழுதப் பயின்றார்?

(A) பாரதியார் (B) பாரதிதாசன்

(C) நாமக்கல் கவிஞர் (D) வாணிதாசன்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

12. "தூங்கும் போது விழித்திருக்க வேண்டும் - அதுதான் தூங்காத விழி" என்று பாடியவர் யார்?

(A) வாலி

(B) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

(C) சுரதா

(D) கவிமணி

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

13. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் முதன்முதலில் பாடல் எழுதிய திரைப்படம் எது?

(A) நாடோடி மன்னன்　　(B) படிகட்டி

(C) படிப்பு ஏறாதது　　(D) மகேஸ்வரி

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

14. "ஏட்டில் படித்ததோடு இருந்துவிடாதே - நீ ஏன் படித்தோம் என்பதையும் மறந்துவிடாதே" - இப்பாடல் வரிகளுக்குச் சொந்தக்காரர் யார்?

(A) பாரதியார்

(B) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

(C) தாரபாரதி

(D) முடியரசன்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

15. திரையுலகில் "கம்யூனிச" கருத்துக்களைப் புகுத்தியவர் யார்?

(A) கண்ணதாசன்

(B) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

(C) வாலி

(D) உடுமலை நாராயணகவி

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

16. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எத்தனை ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார்?

(A) 29 ஆண்டுகள் (B) 35 ஆண்டுகள்

(C) 40 ஆண்டுகள் (D) 50 ஆண்டுகள்

We Shine Academy® SINCE 2013 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

17. "தூங்காதே தம்பி தூங்காதே" - என்ற புகழ்பெற்ற பாடலை எழுதியவர் யார்?

(A) பாரதிதாசன்

(B) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

(C) கவிமணி

(D) மருதகாசி

We Shine Academy SINCE 2013 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

18. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் தந்தை பெயர் என்ன?

(A) முத்தையா (B) அருணாசலனார்

(C) கனகசபை (D) ராமசாமி

We Shine Academy SINCE 2013 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

19. "சும்மா கிடந்த நிலத்தைச் சோம்பலில்லாமத் திருத்தி" - என உழவர்களின் பெருமையைப் பாடியவர் யார்?

(A) வாணிதாசன்

(B) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

(C) முடியரசன்

(D) சுரதா

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

20. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்திற்கு 'மக்கள் கவிஞர்' என்ற பட்டத்தை வழங்கியவர் யார்?

(A) தந்தை பெரியார்
(B) அறிஞர் அண்ணா
(C) பாவாணர்
(D) ம. பொ. சிவஞானம்

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

21. "கையில வாங்கிய காசு - அது வாயில போனது ஏசு" என்று பாமர மக்களின் வறுமையைப் பாடியவர் யார்?

(A) கண்ணதாசன்

(B) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

(C) வாலி

(D) சுரதா

22. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய ஒரே ஒரு கவிதை நாடகம் எது?

(A) பாவி (B) கண்ணகி

(C) கலைக்கோயில் (D) கானல் வரி

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

23. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மறைந்த ஆண்டு எது?

(A) 1955 (B) 1959 (C) 1961 (D) 1963

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

24. "எண்ணம் போல வாழ்வு" என்று திரைப்படப் பாடல்கள் மூலம் நீதியைப் போதித்தவர் யார்?

(A) கவிமணி

(B) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

(C) கண்ணதாசன்

(D) வாலி

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

25. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எந்த இதழில் உதவியாசிரியராகப் பணியாற்றினார்?

(A) முல்லை (B) குயில் (C) ஜனசக்தி (D) தென்றல்

We Shine Academy SINCE 2013 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

26. "திருடரைப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" - என்ற வரிகள் யாருடையது?

(A) பாரதியார்

(B) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

(C) பெரியார்

(D) அண்ணா

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

27. தமிழக அரசு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் நினைவாக எங்கு மணிமண்டபம் அமைத்துள்ளது?

(A) தஞ்சாவூர் (B) பட்டுக்கோட்டை

(C) சென்னை (D) திருச்சி

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

28. "மனைக்கு விளக்கம் மடவாள் மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர் ......"
– இப்பாடல் ஆசிரியரைக் கண்டறிந்து எழுதுக.
(A) விளம்பி நாகனார்
(B) சமண முனிவர்
(C) முன்றுறை அரையனார்
(D) நல்லாதனார்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

29. தொடரை நூலுடன் பொருத்துக.

| தொடர்கள் | நூல்கள் |
| --- | --- |
| (a) ஆற்றுணா வேண்டுவது இல் | — (1) நாலடியார் |
| (b) நாய்கால் சிறுவிரல் போல் | — (2) திருக்குறள் |
| (c) மணக்கு விளக்கம் மடவாள் | — (3) பழமொழி |
| (d) அன்பின் வழியது உயிர்நிலை | — (4) நான்மணிக்கடிகை |

(A) (3) (1) (2) (4)　　(B) (4) (2) (3) (1)

(C) (3) (1) (4) (2)　　(D) (2) (1) (4) (3)

30. நான்மணிக்கடிகையைப் பாடியவர் யார்?

(A) விளம்பி நாகனார்
(B) கபிலர்
(C) முன்றுறை அரையனார்
(D) கடுவெளிச் சித்தர்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

31. பொருந்தாத இணையைக் கண்டறிக:

A) முல்லைப்பாட்டு — மதுரைக்காஞ்சி
B) இன்னா நாற்பது — பட்டினப்பாலை
C) இன்னிலை — பழமொழி
D) தமிழ்மறை — நான்மணிக் கடிகை

32. கீழ்க்காணும் கூற்றுக்களில் பொருத்தமில்லாததைக் கூறுக.
I. பெருமுத்தரையர் பற்றிய குறிப்பு நாலடியாரில் உள்ளது. பழமொழியிலும் இடம்பெற்றுள்ளது.
II. கபிலர் பாடிய அறநூல் 'இன்னா நாற்பது'
III. நான்மணிக்கடிகையில் உள்ள நூறு பாடல்களும் நான்கு நான்கு கருத்துக்களைக் கொண்டு இயங்குவது
IV. அம்மை என்னும் வனப்பின்பாற்படும் காரியாசான் இயற்றிய நூல் சிறுபஞ்சமூலம் என்பதாகும்.
(A) II மட்டும் பொருத்தமற்றது
(B) III மட்டும் பொருத்தமற்றது
(C) IV மட்டும் பொருத்தமற்றது
(D) I மட்டும் பொருத்தமற்றது

33. பொருத்துக:

(a) நான்மணிமாலை — 1. கவிதை
(b) மலரும் மாலையும் — 2. சிற்றிலக்கியம்
(c) நான்மணிக்கடிகை — 3. காப்பியம்
(d) தேம்பாவணி — 4. நீதிநூல்

(A) 2 1 4 3 (B) 3 2 1 4 (C) 2 3 1 4 (D) 3 4 2 1

34. பொருத்துக

| நூல் | ஆசிரியர் |
| --- | --- |
| (a) ஆசாரக்கோவை | – 1. கூடலூர் கிழார் |
| (b) கார் நாற்பது | – 2. விளம்பி நாகனார் |
| (c) முதுமொழிகாஞ்சி | – 3. கண்ணன் கூத்தனார் |
| (d) நான்மணிக்கடிகை | – 4. பெருவாயின் முள்ளியார் |

(A) 3 1 2 4 (B) 4 3 1 2 (C) 3 2 4 1 (D) 1 3 2 4

35. 'துண்டு' என்ற அடைமொழியால் குறிக்க பெறும் நூல் யாது?

A) ஆசாரக் கோவை

B) நான்மணிக்கடிகை

C) இனியவை நாற்பது

D) சீவகசிந்தாமணி

36. பிரித்தெழுதுக: மாசற

(A) மாச + அற (B) மாசு + அற (C) மா + சற (D) மாசு + உற

We Shine Academy

37. சொல்லை பிரித்தெழுதுக: பிரித்தெழுதுக

(A) பிரி + எழுதுக
(B) பிரித்து + எழுதுக
(C) பிரித் + தெழுதுக
(D) பிரித்தெழு + துக

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

38. 'செம்பயிர்' பிரித்தெழுதுக.

(A) செம்மை + பயிர்
(B) செம் + பயிர்
(C) செமை + பயிர்
(D) செம்பு + பயிர்

www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344

39. மூச்சடக்கி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) மூச்சு + அடக்கி (B) மூச் + அடக்கி

(C) மூச் + சடக்கி (D) மூச்சை + அடக்கி

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

40. 'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது

(A) என் + றென்றும்
(B) என்று + என்றும்
(C) என்றும் + என்றும்
(D) என் + என்றும்

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

41. 'கைப்பொருள்' - என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது

(A) கையில் + பொருள்

(B) கை + பொருள்

(C) கைப் + பொருள்

(D) கைப்பு + பொருள்

www.weshineacademy.com

8939 144 344 | 8939 244 344

42. 'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) வான + மளந்தது (B) வான் + அளந்தது

(C) வானம் + அளந்தது (D) வான் + மளந்தது

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

43. நூலகம் என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது

(A) நூ + அகம் (B) நூல் + அகம்

(C) நூல + கம் (D) நூல் + அங்கம்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

44. 'தோரண மேடை' - என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது

(A) தோரணம் + மேடை (B) தோரண + மேடை

(C) தோரணம் + ஒடை (D) தோரணம் + ஓடை

45. "நலமெல்லாம்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) நலம் + எல்லாம்  (B) நலன் + எல்லாம்

(C) நலம் + எலாம்  (D) நலன் + எலாம்

We Shine Academy SINCE 2013 TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM Guiding you to get through

46. 'பொய்யகற்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) பொய் + அகற்றும்

(B) பொய் + கற்றும்

(C) பொய்ய + கற்றும்

(D) பொய் + யகற்றும்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

47. 'பூட்டுங்கதவுகள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) பூட்டு + கதவுகள்
(B) பூட்டும் + கதவுகள்
(C) பூட்டின் + கதவுகள்
(D) பூட்டிய + கதவுகள்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

48. "அருந்துணை" என்பதைப் பிரித்தால்

(A) அரு + துணை

(B) அரு + இணை

(C) அருமை + துணை

(D) அருமை + இணை

www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344

49. நிலத்தினிடையே என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது

(A) நிலம் + இடையே

(B) நிலத்தின் + இடையே

(C) நிலத்து + இடையே

(D) நிலத் + திடையே

We Shine Academy SINCE 2013 TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM Guiding you to get through

50. எந்த இரண்டு சொற்களை இணைத்தால் கீழ்க்கண்ட புதிய சொல் கிடைக்கும் (பாடறிந்து)

(A) பாட் + அறிந்து
(B) பா + அறிந்து
(C) பாடு + அறிந்து
(D) பாட்டு + அறிந்து

We Shine Academy
SINCE 2013
Guiding you to get through
TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM




www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344